4. புதுமைப் பூக்கள்

அலகு அறிமுகம்

நம் வாழ்விலும் வாழ்க்கைப் பயணத்திலும் முக்கிய இடம் பெறுபவள் பெண்ணே! ஒரு தாயாய் . . . சகோதரியாய் . . . மனைவியாய் . . . மகளாய் . . . நம் வாழ்வோடு இணைந்திருப்பவள் பெண். தொன்று தொட்டு இன்று வரை பெண் எதிர்கொள்ளும் குடும்பப் பிரச்சினைகள், அனுபவிக்கும் சமூகப் பிரச்சினைகள், அடிமைத் தனங்கள் எத்தனை எத்தனையோ! முற்போக்குச் சிந்தனையாளர்களின் முயற்சியாலும் போராட் டங்களாலும் ஏற்பட்ட மாற்றங்கள் இன்று பெண்கள் வாழ்வில் வரவேற்கத் தகுந்த ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. பண்டைய நிலை முற்றிலும் மாற வேண்டும். பெண்மையை மதிக்க வேண்டும் தனக்கு நிகரானவர் என்று எண்ணி நடத்தப்பட வேண்டும், அவர்தம் சாதனையை உளமாரப் பாராட்டி ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த மனநிலையை மாணவர்களின் உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத் தோடு இவ்வலகு அமைக்கப்பட்டுள்ளது.

கட்டுரை, கவிதைகள், குறிப்புகள், விளக்கக் கட்டுரைகள் இடம்பெறும் இவ்வலகின் வாயிலாக மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய கற்றல் அடைவுகள் சிறப்புறக் கிடைக்க வழிகாட்டுவீர்கள் அல்லவா?

நேரம்

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்:
20 பிரிவேளைகள் (சுமார்)

முதன்மைக் கற்றல் அடைவுகள்

- பெண்ணியம் பற்றிய விழிப்புணர்வு வாக்கியங்கள் உருவாக்குகிறார்கள்.
- நேர்முகம் காண வினாநிரல் தயாரிக்கிறார்கள்.
- குறிப்பிட்ட தலைப்புகளில் குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.
- சாதனைகள் புரிந்த பெண்கள் பற்றிய கருத்துகள் சேகரித்துச் சொற்பொழிவு ஆற்றுகிறார்கள்.
- கவிதைகளை ஒப்பீடு செய்கிறார்கள்.
- கவிதைத் தொகுப்பு உருவாக்குகிறார்கள்.
- கருத்துகள் சேகரித்துப் பட்டிமன்றம் நடத்துகிறார்கள்.
- அடிப்படை மொழிக்கூறுகளைத் தெரிந்துகொள்கிறார்கள்.

கற்றல் துணைக் கருவிகள்

- பத்திரிகைச் செய்தித் தொகுப்புகள்
- அலகோடு தொடர்புடைய பாடல் தொகுப்பு
- பெண்விடுதலைச் சிந்தனையாளர்கள் படத்தொகுப்பு
- சாதனைப் பெண்கள் பட்டியல் (பலதுறைகள்)

அலகிற்குள் செல்லும்முன்

- பாடப்பகுதியையும் செயல்பாடுகளையும் வாசித்துப் புரிந்து கொள்ளவேண்டும்.
- பெண்களுக்குப் பண்டைக்காலத்தில் இழைக்கப்பட்ட கொடுமைகள், கட்டுப்பாடுகள், மூடப்பழக்கவழக்கங்கள் பற்றிய செய்திகளைச் சித்திரத்துடன் கூடிய தகவல் குறிப்புகளாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.
- பெண்ணின் பெருமை கூறும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள், சாதனைப்பட்டியல் போன்றவை திரட்டி வைத்தல் நன்று
- பெண்களின் உரிமைகள் பற்றிய சட்டங்கள் தெரிந்து வைத்துக் கொள்வது நன்று (சொத்துரிமை).
- இந்தியாவிலும் கேரளத்திலும் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் அமைப்புகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.

அலகு வலைச்சட்டம்

கருத்துகள் / திறன்கள்	கற்றல் செயல்பாடுகள்	முதன்மைக் கற்றல் அடைவுகள்
✧ கருத்துத் தெளிவு, சுருங்கக் கூறுதல், குறிப்பிட்ட தலைப்புக்குத் தகுந்த சுருக்கமான விளக்கம்	• விழிப்புணர்வு வாக்கியம், வினாநிரல், சிறு குறிப்பு	✧ விழிப்புணர்வு வாக்கியங்கள் உருவாக்குகிறார்கள், வினாநிரல் தயாரிக்கிறார்கள், குறிப்பிட்ட தலைப்புகளில் குறிப்பு தயாரிக்கிறார்கள்
✧ குறிப்பிட்ட தலைப்பு, கருத்து முழுமை, இனிமையான தொடக்கம், முடிவு, அழகு, கவர்ச்சி	• சொற்பொழிவு, கவிதைத் தொகுப்பு, கவிதை ஒப்பீடு	⌑ கருத்துகள் சேகரித்துச் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள், கவிதைகளை ஒப்பீடு செய்கிறார்கள், கவிதைத் தொகுப்பு உருவாக்குகிறார்கள்
✧ தகவல் சேகரித்தல்,கருத்துகளைத் திறம்பட முன்வைத்தல், கருத்துத் தெளிவு, கருத்தை உறுதிப்படுத்துதல்	• பட்டிமன்றம்	⌑ கருத்துகள் சேகரித்துப் பட்டி மன்றம் நடத்துகிறார்கள்
✧ மொழிக்கூறுகளைத் தெரிந்து கொண்டு மொழியைச் சிறப்பாகக் கையாளுதல்	• மொழிக்கூறுகள்	⌑ மொழிக்கூறுகளைத் தெரிந்துகொள்கிறார்கள்.

நுழைவுச் செயல்பாடு

கதை கேட்பது உங்களுக்குப் பிடிக்கும் அல்லவா? என்று கேட்டுக் கதையைச் சொல்லுங்கள். 85 வயதான தாத்தா ஒருவர் தன் கனவிலும் கூட 30 வருடங்களுக்கு முன்பு இறந்த மனைவியை உதைக்கிறார். கனவிலேயே இவ்வளவு கொடூரமாக நடந்துகொள்ளும் தாத்தா தனது மனைவி உயிரோடு இருந்தபோது அவரை எப்படி நடத்தியிருப்பார் என்று யோசித்துப் பாருங்கள். இப்படிப் பழைய காலங்களில் வீட்டிலும் சமூகத்திலும் பெண்கள் எப்படியெல்லாம் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்பதைப் பற்றிய பாடத்தை நாம் படிக்கலாமா? என்று கேட்டு பாடப்பகுதியை வாசிக்கத் தூண்டுங்கள். மேலும் பெண்களுக்கு எதிரான (மாமியார் கொடுமை, தற்கொலை, பெண்கொடுமை) போன்ற செய்திகளைச் செய்தித்தாள்களில் சேகரித்து மாணவர்களை வாசிக்கச் செய்தும் பாடப்பகுதிக்குள் செல்லலாம் அல்லவா.

கூண்டுக்கிளிகள்

கூண்டுக்கிளிகள் என்ற பாடப்பகுதியை மாணவர்கள் மௌனமாக இரண்டு முறை வாசிக்கின்றனர். பின்பு ஒவ்வொருவரும் உரக்க வாசிக்கட்டும். நீங்கள் ஓரிரு முறை குரல் ஏற்றத்தாழ்வுகளுடன் வாசியுங்கள். பின்பு வாசித்த பகுதி மாணவர்களுக்குப் புரிந்துள்ளதா? கருத்துணர்ந்து வசித்துள்ளனரா என்று சோதித்து அறிந்து கொள்ளச் சிறு சிறு வினாக்களைக் கேட்கலாம்.

எ.கா:

தாத்தா கனவில் செய்தது என்ன?

பூமியில் உள்ள உயிரினங்களை அடக்கி ஆண்டு கொண்டிருப்பது யார்?

இங்குப் பெண்களுக்கு இல்லை என்று சொல்லப்படுவன யாவை?

ஹைபேஷியா எங்கெல்லாம் சென்று கல்வி கற்றார்?

மாணவர்கள் பாடப்பகுதியை நன்கு பொருளுணர்ந்து கற்றனர் என்பதை உறுதி செய்ய ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதிலைக் கூறட்டும். பின் நான் இப்போது சில பெண்மை விழிப்புணர்வு வாக்கியங்கள் சொல்வேன் நீங்களும் இதுபோன்ற விழிப்புணர்வு வாக்கியங்கள் எழுத வேண்டும் என்று சொல்லிச் சில வாக்கியங்கள் கூறுங்கள்.

- **பெண்கள் நாட்டின் கண்கள்**
- **பெண்மையைப் போற்றுவோம் பெருமை கொள்வோம்**
- **பெண்கள் நாட்டின் தூண்கள்**
- **பெண்ணில்லாத உலகம் ஒளி இல்லாத உலகம்.**

இதுபோல மாணவர்களும் எழுதட்டும்.

படைப்புத் தொகுப்பில் சேருங்கள்

கேரளமும் பெண்கள் அமைப்புகளும்

1. குடும்பஸ்ரீ
2. ஜனஸ்ரீ
3. வனிதா
4. அயல்கூட்டம்
5. குடும்ப சங்கமம்

வினாநிரல் தயாரியுங்கள்

விழிப்புணர்வு வாக்கியங்கள் எழுதிவிட்டீர்கள் அல்லவா? மேலும் ஆசிரியர் கேரள ஓட்ட வீராங்கனையான பி. டி. உஷா பற்றியும் டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸா பற்றியும் மாணவர்களிடம் பலவிதமான வினாக்களைக் கேட்டு ஒரு சிறிய உரையாடல் நடத்தலாம். நமது பள்ளியில் இருந்து உபமாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு முதலிடம் பெற்று நம் பள்ளிக்குப் பரிசினை பெற்றுத்தந்த மாணவியிடம் அவள் வெற்றிக்குக் காரணமாக அமைந்த காரணிகள் எவையெல்லாம் என்று கேட்டுத் தெரிந்துகொள்ள ஒரு வினாநிரல் தயாரிக்கலாமா?

வினாநிரல் தயார் செய்யும் போது...

- எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றிய பரந்த அறிவு பெற்றிருத்தல்
- தகவலாளியிடம் என்னென்ன வினாக்களைத் தொடுக்கலாம் என்று ஆலோசித்து வினாநிரலைத் தயாரிக்கும் திறன்
- நல்ல அணுகுமுறை
- தகவலாளியிடம் கருத்துகளை உள்வாங்கி தொகுக்கும் திறமை
- நடுவுநிலைமை

1. நீங்கள் எத்தனை போட்டிகளில் கலந்து கொண்டீர்கள்?
2. எத்தனை போட்டிகளில் வெற்றி பெற்றீர்கள்?
3. உங்கள் விளையாட்டுத் திறமையைக் கண்டறிந்தவர்கள் யார்?
4. உங்களுக்கு விளையாட்டுக்குப் பயிற்சியாளர் உண்டா?

5. தினமும் எத்தனை மணிநேரம் பயிற்சியில் ஈடுபடுவீர்கள்?
6. போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெற உங்கள் உணவுப் பழக்கவழக்கத்தில் ஏதாவது மாற்றம் ஏற்படுத்தியுள்ளீர்களா?
7. நண்பர்கள், பெற்றோர்கள் ஏதாவது உதவிகள் செய்கிறார்களா?
8. போட்டிகளில் வெற்றி பெற்று பரிசு கிடைத்தபோது உங்கள் மன நிலை எப்படி இருந்தது?
9. மற்றவர்களும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?

குழந்தைகள் கேட்ட/தயாரித்த கேள்விகளை அவர்களது குறிப்பேட்டில் எழுதட்டும். அவற்றை சுய, மற்றும் குழு மதிப்பீட்டிற்கு உட்படுத்தட்டும். அதிகம் கேள்விகள் எழுதிய மாணவர்களைப் பாராட்டுவீர்கள் அல்லவா!

சிறுகுறிப்பு எழுதுங்கள்

கணவன் இறந்தவுடன் மனைவியும் அதே சிதையில் விழுந்து எரிந்து இறந்துவிட வேண்டும்; அதற்கு மாறாகச் செயல்படுபவர்களை அதே சிதையில் தூக்கிப் போட்டுக் கொல்லும் முறையை **'சதி அல்லது உடன்கட்டை ஏறுதல்'** எனப்படும் என்று உடன்கட்டை ஏறுதலுக்கு சிறு விளக்கம் கொடுங்கள். பின்பு பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி குறிப்பு எழுதச் சொல்லுங்கள். எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்வது நல்லது தானே!

சிறு குறிப்பு எழுத

- கருத்தைச் சரியான முறையில் வரிசைப் படுத்துதல்
- கருத்தின் முழுமையும், நம்பகத்தன்மையும்
- கருத்துகளை வெளிப் படுத்தக் கூடிய திறன்.
- தகுந்த வாக்கியங்கள், சிறப்பான மொழிநடை.

ஹைபேஷியா

பண்டைய எகிப்தில் அலெக்ஸாண்ரிடிரி யாவில் கி.பி.4-ம் நூற்றாண்டில் வாழ்ந் தவர் ஹைபேஷியா. கிரேக்க இத்தாலி, மத்திய தரைக்கடல் நாடுகளுக்குச் சென்று கற்றவர். இலக்கியம், கணிதம், தத்துவம், அறிவியல் போன்ற பல துறைக ளில் தலைசிறந்தவராகத் திகழ்ந்தவர். பண்டை கணிதநூல்களை எளிமைப்ப டுத்தி விளக்க உரைகள் எழுதியவர். இவர் எழுதிய நூல்கள் பிற்காலத்தில் வந்த விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளுக்கு அடிப்படையாக அமைந்தன. அவர்

ஆண்களைப் போல உடை அணிபவர். அறிவும் துணிவும் நிரம்பியவர். தாமாகவே தேர் ஓட்டிச் செல்வார். எனவே ஹைபேஷியாவை அன்றைய மத வெறியர்களுக்குப் பிடிக்கவில்லை. அவரை இழுத்து அடித்து உதைத்து ஆடைகளைப் பிய்த்து உயிருடன் தீயிட்டுக் கொளுத்தினர். அவர் இறப்பால் ஏராளம் விஞ்ஞான ரகசியங்களும் கண்டுபிடிப்புகளும் எரிந்து சாம்பலாகின.

இங்கு **ஹைபேஷியா** என்ற பெண்மணியின் வாழ்க்கையில் ஏற்பட்ட துயர நிலை சிறு குறிப்பாகத் தரப்பட்டுள்ளது. இதை அடியொற்றி **ரூப்கன்வர்** பற்றி சிறுகுறிப்பு ஒன்று எழுதச் செய்யலாம். தனிநபர் செயல்பாடாக எழுதட்டும். எழுதுதலைத் தொடர் நிலை மதிப்பீடு செய்யப் பயன்படுத்துங்கள்.

புதுமைப்பெண்கள்

புதுமைப்பெண்கள், பெண்மை என்ற இருவகைப் பாடல்கள் தரப்பட்டுள்ளன. முதல் பாடல் புதுக்கவிதை வடிவில் **ஈஸ்வரி ஏ. ஆர்.** என்பவரும் இரண்டாவது பாடல் மரபுக் கவிதைப் பாணியில் **பாரதியாரும்** எழுதியுள்ளனர். இரண்டு பாடல்களுமே பெண்களின் சாதனைகளையும் அவர்கள்தம் மீது கொண்ட தன்னம்பிக்கையையும் பறை சாற்றுவனவாக அமைந்துள்ளன. மேலும் இரண்டு பாடல்களும் பெண்மையின் மேன்மையை எடுத்துரைப்பதாகவும் உள்ளன.

சொற்பொழிவு ஆற்றுவோம்

பெண்களுக்கு எதிராக நடைபெறும் செயல்களை எதிர்த்துப் பெண் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் பலர். அவ்வண்ணமே இன்றைய பெண்கள் எல்லாத்துறைகளிலும் வெற்றி வாகை சூடிவருகிறார்கள். நம் பாடத்தில் கற்ற பெண்கள் பற்றிய செய்திகள், பத்திரிகைகள், தொலைக்காட்சி, மற்றும் நூல்கள் மூலம் தெரிந்து கொண்ட செய்திகள் இவற்றை எல்லாம் தொகுத்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும். கருத்தகளைச் சேகரிப்போம் என்று கூறிச் சொற்பொழிவுப் போட்டியை வகுப்பிலேயே நடத்துங்கள்.

தலைப்பிற்கேற்ற கருத்துகளைக் கையாளட்டும். கருத்துகளைக் கோர்வையாகக் கூறட்டும். கேட்போர் மனதைக் கவரும் வண்ணம் உணர்ச்சி பூர்வமாகவும், இரசனையோடும் பேசட்டும். செயல்பாட்டை வெற்றிகரமாக நடத்துங்கள்.

‘பேசுதலை’ தொடர் நிலை மதிப்பீடு செய்ய மறவாதீர்கள்.

ஒப்பீடு செய்வோம்

மாணவர்கள் பாடலை ஓரிரு முறை வாசிக்கட்டும். நீங்களும் இரு பாடல்களையும் இரண்டொரு முறை வாசித்துக் காட்டுங்கள். பாடல் கருத்துகள் பற்றி குறிப்புகளின் அடிப் படையில் விளக்கம் அளியுங்கள். பின்பு பாடல் பொருளை மாணவர்கள் புரிந்து கொண்டுள்ளார்களா என்பதை அறிந்துகொள்ள சில வினாக்கள் கேட்டு உறுதிப்படுத்துங்கள். மாணவர்கள் தாங்கள் தெரிந்துகொண்ட கருத்து களைச் சொல்லட்டும். இரு கவிதை களையும் ஒப்பிட்டு கருத்துகளை எழுதட்டும். வகுப்புக் குறிப்பேடு களிலும் எழுதட்டும். மதிப்பீட்டுக்கும் பயன்படுத்துங்கள்.

ஒப்பீடு செய்தல் – சில குறிப்புகள்

- இரு படைப்புகளை ஒப்பீடு செய்ய வேண்டுமெனில் அவற்றை
- நன்கு வாசிக்க வேண்டும்
- மையக் கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்
- நடைபெறும் நிகழ்வுகளை உற்றுக் கவனிக்க வேண்டும்
- கருத்துக்களின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்துகொள்ள வேண்டும்

பாரதியாரும் பெண்மையும்

பெண்மை

பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!
தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பெயரும் சதியென்ற நாமமும்
அன்பு வாழ்கென் றமைதியில் ஆடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பம் தீர்வது பெண்மையி னாலடா
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்

பெண்கள் விடுதலைக் கும்மி

கும்மியடி! தமிழ்நாடு முழுவதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்

விடுதலை

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநிகர் சமான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே

நவமணிகள்

பல பிரச்சினைகளைச் சந்தித்து சாதனைகள் படைத்த சில சாதனைப் பெண்களைப் பற்றிய தகவல்களை விரிவாகக் கூறுங்கள் எ.டு. இந்திரா காந்தியைப் பற்றிய விபரங்கள். அதிலிருந்து சில சிறு வினாக்களையும் கேட்டு மாணவர்களிடம் கேட்கும் திறனை மதிப்பிடுவதுடன் சாதனைப் பெண்கள் என்ற தலைப்பில் அமைந்த பாடத்திலுள்ள பிற பெண்மணிகளைப் பற்றியும் மேலும் பாடப்பகுதியில் கூறப்படாத சில தகவல்களையும் நூலகப் புத்தகங்களிலிருந்து சேகரித்து எழுதுமாறு சொல்லுங்கள். ஏனைய சாதனைப் பெண்களைப் பற்றி கேள்விகளையும் கேளுங்கள்.

- அனைவராலும் அன்னை என அழைக்கப்பட்டவர் யார்?
- நியூயார்க் நகரச் சாலைக்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது?

- தமிழக கவர்னராகப் பணிபுரிந்த பெண்மணி யார்?

மாணவர்கள் பாடப்பகுதியை வாசித்து விடை கண்டுபிடிக்கட்டும். சொல்லட்டும். எழுதட்டும்.

இணைத்துப் படிப்போம்

சாதனைப் பெண்களைப் பற்றிப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? என்று கூறிச் செயல்பாட்டை செய்யத் தூண்டுங்கள். பெயர்களைச் சரியானபடி இணைத்து எழுதட்டும். நீங்களும் கரும்பலகையில் இணைத்து எழுதுங்கள். மாணவர்கள் எழுதியதை ஒப்பிட்டு சுயமதிப்பீடு செய்யட்டும். தவறுகளைத் திருத்தி எழுதி மேம்படுத்தட்டும்.

மனிதத்தைப் புனிதமாக்கியவர்	-	அன்னை தெரேசா
இந்தியாவின் முதல் பெண் பிரதமர்	-	இந்திரா காந்தி
மனிதக் கணினி	-	சகுந்தலா தேவி
முதல் பெண் நீதிபதி	-	பாத்திமா பீவி
சிகரம் தொட்டவர்	-	பச்சேந்திரி பால்
கடமைப் பெண்	-	கிரண் பேடி
இசைக் குயில்	-	எம். எஸ். சுப்புலெட்சுமி
விண்வெளிப் பெண்	-	கல்பனா சாவ்லா
ஐ.என்.ஏ அதிகாரி	-	லட்சுமி

அட்டவணையைக் குறிப்பேட்டிலும் எழுத செய்யுங்கள்

பெண்கள் நாட்டின் கண்கள்

சாதனைப் பெண்களைப் பற்றிப் படித்தோம். இவர்களைப் போலவே சாதனை படைத்தவர்கள் வேறு சிலர்.

இவர்கள் எத்துறையில் சாதனை படைத்தார்கள் என்று நூலகப் புத்தகத்தின் உதவி கொண்டு எழுதச் செய்யுங்கள். அவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளாகவும் எழுதச் செய்யுங்கள்.

'எழுதுதல்' தொடர் மதிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.

- அருந்ததி ராய் - பத்திரிகைத்துறை
- பி.டி.உஷா - விளையாட்டுத் துறை - தடகளம்
- சுதாசந்திரன் - நாட்டியம்
- மேரிகோம் - விளையாட்டுத் துறை - குத்துச்சண்டை
- ஹரிதா வி. குமார் - கல்வி - சிவில் சர்வீஸ் தேர்வில் முதலிடம் பெற்ற முதல் கேரளப் பெண்மணி.

சாதித்துக் கொண்டிருக்கும் பெண்மணிகள்

சோனியா காந்தி

இந்திய அரசியலில் சக்தி மிகுந்த பெண்மணி. காங்கிரஸ் கட்சியின் தலைவர். தேசிய ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் செயலாற்றுகிறார்.

வளர்மதி

அரியலூரைச் சேர்ந்த இவர் இஸ்ரோ விஞ்ஞானி ஆவார். செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்திச் சாதனை புரிபவர்.

ஜெயலலிதா

மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வராகப் பதவியேற்று உள்ளவர். இந்திய அளவில் சக்திவாய்ந்த அரசியல் தலைவர்களில் ஒருவர்.

சாந்தா

அடையாறு புற்றுநோய் சிகிச்சைமையத்தின் தலைவரும் மருத்துவரும் ஆவார். குறைந்த செலவில் மருத்துவம் பார்க்கும் அமைப்பாக இந்த மையத்தை மாற்றியது இவரே.

சாய்னா நேவால்

இந்தியாவின் பேட்மின்டன் அடையாளம். ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவர். உலகத் தரவரிசையில் இருப்பது 3ஆம் இடம்.

மீரா நாயர்

இந்தியாவின் தலைசிறந்த திரைப்பட இயக்குனர்களில் ஒருவர். இவரது படைப்புகள் உலக அளவில் வரவேற்பைப் பெற்றவை.

கிரன் மஜீம்தார் ஷா

உலகின் முதல் வாய் வழி உட்கொள்ளும் இன்சுலின் தயாரிக்கும் பயோகான் நிறுவனத்தின் தலைவர், இவரது நிறுவனத்தின் இன்றைய மதிப்பு 2,000 கோடி ரூபாய்.

பட்டிமன்றம் நடத்துவோம்

பட்டிமன்றம் பற்றித் தெரியுமா, தொலைக்காட்சிகளில் பார்த்துள்ளீர்களா என்ற கேள்விகளுடன் கலந்துரையாடலைத் தொடங்குகள் கருத்துக்களைக் கூறட்டும். பாடப்பகுதிகளை நன்கு பொருளுணர்ந்து வாசித்தும் பத்திரிக்கைச் செய்திகளிலிருந்தும் வார, நாள் இதழ்களிலிருந்து திரட்டிய அன்றாட உண்மை சம்பவங்களும் பட்டிமன்றத்தை சிறப்பாகத் தயாரித்து வழங்க உதவியாக

இருக்கும் அல்லவா? அவ்வாறு சிறப்பாக நடத்த ஆசிரியர்களின் உதவி மிகவும் இன்றியமையாதது இதனை உணர்ந்து நீங்கள் மாணவர்களுக்கு உதவி செய்யுங்கள். பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளக் குறிப்பு களையும் பயன்படுத்திக் கொள்ளட்டும்.

பட்டிமன்றக் குறிப்புகள்:-

- வெட்டியும் ஒட்டியும் பேசுவதற்கேற்றத் தலைப்பைத் தேர்வு செய்தல்.
- இரு அணியினரையும் அணித்தலைவர்களையும் தேர்வு செய்தல்.
- ஒவ்வொரு அணியிலும் இரண்டு பேராவது இடம்பெறுதல் அவசியம்.
- தகுதி வாய்ந்த நடுவர் ஒருவரைத் தேர்வு செய்தல் (ஆசிரியர் நடுவராக இருக்கலாம்).
- தலைப்பைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுதல்.
- தலைப்புக்குத் தேவையான தகவல்களைத் திரட்டப் போதுமான நேரம் கொடுத்தல்.

இலக்கணம் - போலி

இவ்வலகின் மூலம் மாணவர்கள் மொழியைக் கற்க இலக்கணப் பகுதியும் தரப்பட்டுள்ளது. ஆசிரியர் மாணவர் இவர்களுக்கு இடையே நடைபெறும் உரையாடல் வடிவில் அமைந்துள்ள பகுதியை எடுத்துக்காட்டுடன் விளக்குதல். மேலும் இதுபோன்ற எடுத்துக்காட்டுகள் மூலம் மூவகைப் போலிகளைப் பற்றிய தெளிவான கருத்து மனதில் பதியட்டும். இவை மொழியை வளமுடையதாக மாற்றுகிறது என்ற கருத்து இச்செயல் மூலம் மாணவர்களுக்கு உறுதிப்படுமல்லவா?

போல வருவது போலி. இலக்கணத்தில் சில சொற்கள் தங்கள் இயல்பான எழுத்துக்களை இழந்து திரிந்து வரும். இதுவே போலி.

இது முதல், இடை, கடை என்று மூன்று வகைப்படும். கடைப்போலியை முற்று, இறுதி என்றும் கூறுவர்.

இதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவீர்கள் அல்லவா?

அலகு மதிப்பீடு (மாதிரி)

செயல்பாடு 1

உலக மகளிர் தினத்தையொட்டி நடைபெறும் ஊர்வலத்தில் பங்குகொள்ளும் நமதுபள்ளி மாணவமாணவியர் கையில் கொண்டு செல்வதற்கான விழிப்புணர்வு வாக்கிய அட்டைகள் தயாரிக்க வேண்டும். அதற்கான சில பெண்மை **வழிப்புணர்வு வாக்கியங்கள்** எழுதுங்கள்.

செயல்பாடு 2

அரியலூரைச் சேர்ந்தவர் திருமதி. வளர்மதி. இவர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் (ISRO) பணிபுரியும் பெண் விஞ்ஞானி. செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும் பணியில் புகழ் பெற்றவர். அவரை ஒரு பேட்டி காண வேண்டும். அதற்கான **வினா நிரல்** ஒன்று தயார் செய்யுங்கள்.

செயல்பாடு 3

பள்ளியில் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்ற இந்திராவிற்கு மாவட்ட அளவில் நடைபெறும் சொற்பொழிவுப் போட்டியில் பங்கு பெற அழைப்பு வந்துள்ளது. 'பாரதி கண்ட புதுமைப் பெண்கள்' என்ற தலைப்பில் பேசுவதற்கு இந்திராவிற்கு உதவும் வகையில் ஒரு **சொற்பொழிவுக் குறிப்பு** தயார் செய்யுங்கள்.

செயல்பாடு 4

இயற்கையை வர்ணிக்கும் இரு கவிதைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்விரு கவிதைகளையும் **ஒப்பிட்டு உங்கள் கருத்துகளை** எழுதுவீர்கள் அல்லவா?

ஆற்றுவெள்ளம் நாளைவரத்
தேற்றுதே குறி - மலையாள
மின்னல் - ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளைக்
கூப்பிடுதே

கன்னிக்கடலருகே - அழகாய்க்
காணும் கரைதனிலே
மின்னும் மணற்பரப்பில் - குழந்தாய்
மெல்ல இருந்திடம்மா
சிந்தூரம் வைத்த கலம் - உடைந்து
சிந்திச் சிதறுதல் போல்
அந்தி தரும் விசும்பைக் குழந்தாய்
ஆரே மறப்பாரம்மா

* * *

மதிப்பீட்டுக் குறிப்புகள்

1. **விழிப்புணர்வு வாக்கியங்கள்**
   - சந்தர்ப்பத்திற்கு ஏற்றக் கருத்து, மொழி
   - சுருக்கம்.
   - கருத்துத் தெளிவு.
2. **வினா நிரல்**
   - வினாக்கள் முக்கியத்துவத்திற்கு ஏற்ப வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
   - பேட்டிகாணப்படுவரின் துறை, சேவை தொடர்பான கேள்விகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
   - சிறப்பும் எளிமையும் கொண்ட வினாக்கள்.
3. **சொற்பொழிவுக் குறிப்பு**
   - கருத்துக்கள் அதன் முக்கியத்துவத்திற்கு ஏற்ப வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.
   - பிரச்சனையின் தாக்கம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.
   - சிறப்பான, சொற்பொழிவுக் கேற்ற மொழிநடை.
4. **ஒப்பீடு**
   - ஒப்புமைப்படுத்தித் தனது எண்ணங்களை வெளியிடுதல்
   - கவிதையோடு தொடர்புடைய கருத்துகளின் சுருக்கம்
   - கருத்துகளை முன்னறிவோடு தொடர்பு படுத்தி வெளியிடல்